## ITEM CONTOH BAHAGIAN D

1. கீழ்க்காணும் கதையை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

இளந்தமிழுக்குத் தனது எஸ்.பி.எம் தேர்வு முடிவு அளவில்லா மகிழ்ச்சியைத் தந்தது. பள்ளியில் கடைசி வகுப்பில் படித்த அவனுக்கு எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சிப் பெற்றது வியப்பை அளித்தது. அதற்கு ஒரு காரணம் ஆசிரியர் முருகேசன்.

பள்ளி கட்டொழுங்கு ஆசிரியராகவும் தமிழ்மொழி ஆசிரியராகவும் இருந்த அவர், பள்ளி கட்டொழுங்கு கோப்பில் இடம்பெற்றுள்ள இந்திய மாணவர்களைத் தனிப்பட்ட முறையில் அழைத்து அறிவுரை சொல்லி வழிகாட்டுவார்.

பள்ளியில் சொல்லிக் கொடுக்கும் பாடம் புரியாமல் இருந்ததால் அடிக்கடி மட்டம் போடுவான் இளந்தமிழ். இதையறிந்த ஆசிரியர், “இளந்தமிழ், நீ என் கூட பயணிக்கத் தயாரா?” என்று ஆரம்பித்து, அவனும் கூடுதல் வகுப்புகளில் கலந்து இன்று நல்ல தேர்வு முடிவை எடுத்துள்ளான்.

அ) ஆசிரியர் முருகேசன் செயல்களைப் பற்றி கருத்துரைக்கவும்.

(3 *புள்ளி*)

ஆ) மாணவர்கள் பள்ளியில் பயிலும்போது கல்வியில் சிறந்து விளங்க நீ கூறும்
ஆலோசனை இரண்டனை எழுதுக.

(2 *புள்ளி*)

2. கீழ்க்காணும் படத்தையொட்டி உமது கருத்தைத் தொகுத்து 30 சொற்களுக்குள் எழுதுக.



(10 *புள்ளி*)